REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 11 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :133 பங்குனி 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 07 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"பட்டினி கிடக்குதாம் சனங்கள், நிவாரணத்தை தட்டிப் பறிக்குதாம் அனுமான்"

# நிவாரணம் வழங்க விடாது அரசியல்வாதி இடையூறு!

## பிரதேச செயலர்களுக்கும் அழுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

தொடர் ஊரடங்கு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டு மக்களுக்கு அரசின் நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படாத நிலையில், கொடையாளிகள் ஊடாக வழங்கப்படும் நிவாரணங்களையும் தடுக்கும் முயற்சியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சியின் அரசியல்வாதி ஒருவர் ஈடுபட்டுள்ளார். 02

## 15,273 பேர் கைது

கொழும்பு, ஏப். 7

ஊரடங்குச் சட்டத்தை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து நேற்று மாலை 6 மணி வரையான 6 மணித்தியால காலப்பகுதியினுள் 307 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இக் 06



**இடைவெளி மறந்த மக்கள்** | நாட்டில் கொரோனா தொற்று காணப்படும் நிலையில் சமூக இடைவெளி பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நேற்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபோது கிளிநொச்சி நகரப் பகுதியில் மக்கள் குழுமி நின்று பொருள் கொள்வனவில் ஈடுபட்டனர்.

## கொரோனா 178

கொழும்பு, ஏப். 7

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் இருவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்து 02

## மந்திகையில் இறந்தவருக்கு கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 7

மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்த பருத்தித்துறைவாசிக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று 06

## 8 பேருக்கும் கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 7

கொரோனா வைரஸ் தொற்று உள்ளதா என்று அறிவதற்கு நாவாந்துறையில் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8 பேரின் மாதிரிகள் நேற்று எடுக் 06

## கொரோனா அபாயம் 14 இடங்கள் முடக்கம்

கொழும்பு,ஏப்.7

இலங்கையில் கொரோனா வைரஸ் அபாயத்தால் 14 இடங்கள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் கொச்சிக்கடை போரத்தொட்டை பகுதி, ஜா எலவில் இரு பகுதிகள், யாழ். மாவட்டத்தில் 02

## ஊருக்குள் நுழைந்ததும் வேப்பிலை வரவேற்பு

### குடத்தனை இளைஞர்கள் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஏப்.7

குடத்தனை வடக்குப் பகுதிக்குள் நுழைபவர்கள், மற்றும் வெளியில் செல்பவர்கள் கிராமத்தின் எல்லையில் வேப்பமிலைக் கட்டால் மறிக்கப்பட்டு, கைகளைச் சுத்தமாகக் கழுவிய பின்னரே பயணிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், 02

## தொலைபேசிச் செயலி மூலம் வடக்கு மாணவருக்கு கற்கை

யாழ்ப்பாணம், ஏப்.7

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் கல்வி நடவடிகையில் புதிய நடைமுறையை அறிமுகப்ப டுத்தியுள்ளது என்று வடக்கு மாகாண கல்வித் பணிப்பாளர் 06

## வெகு விரைவில் பொதுத் தேர்தல்

### நாடாளுமன்றைக் கூட்டமுடியாது என்று அடம் பிடிக்கிறார் கோத்தா

கொழும்பு, ஏப். 7

கொரோனா வைரஸ் பரவலை அவசரகால நிலைமையாக கருதவில்லை. அவசரகாலச் சட்டமொன்றை உருவாக்குவது தவிர்ந்து வேறு எந்தவொரு நிலைமையிலும் நாடா 06

## ஆவா குழுவினர் மூவர் பொலிஸாரால் கைது!

### பலர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு வன்முறைகளுடன் தொடர்புடைய ஆவா கும்பலைச் சேர்ந்த வினோதன் என்பவரின் பிறந்தநாளைக் கொண்டாடி 06

## கொரோனாச் சோதனை 3 தடவைகள் வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப். 7

கொரோனா தொடர்பான பரிசோதனையை 3 தடவைகள் மேற் கொள்ள வேண்டும் என்று அரசம ருத்துவ அதி 06



செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க...

செய்தி
077 316 5555
076 584 2222
021 493 0000

விளம்பரம்
071 618 2182
077 959 2628
021 493 1111

## நிவாரணம்...

தன்னால் வழங்கப்படும் பெயர்ப் பட்டியலுக்கே நிவாரணங்களை வழங்கவேண்டும் எனவும், தனது உதவியாளர்கள், உறவினர்கள் ஊடாகவே அவை பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், மாவட்ட, பிரதேச நிர்வாகங்களுக்கு அவர் தொடர் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றாடத் தொழில் செய்வோர் உள்ளிட்ட பல குடும்பங்கள் தொடர் ஊரடங்கினால் தொழில் இழந்து வருமானமின்றி உணவுக்காக ஏங்கித் தவிக்கின்றன. இந்தக் குடும்பங்களுக்கு அரசின் நிவாரணங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு வந்தாலும் இதுவரை எந்த உதவியும் அரசு வழங்கவில்லை. இருப்பினும் பல்வேறு தன்னார்வ கொடையாளிகள் தங்களால் முடிந்த உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார 1.6 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாணத்துக்கு வழங்கியிருந்தார். அதில் 5 லட்சம் ரூபா யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது. அந்தத் தொகையில் 4 லட்சம் ரூபா பணமாகவும், ஒரு லட்சம் ரூபா காசோலையாகவும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் அந்த நிதியில் சதொச ஊடாகப் பொருள்களைக் கொள்வனவு செய்து பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்தது.

வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பிரதேச செயலகங்களுக்கு தலா 30 பொதிகளும், மருதங்கேணி, சாவகச்சேரி, உடுவில், கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கு தலா 50 பொதிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு 80 பொதிகளும், நல்லூர் மற்றும் சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா 25 பொதிகளும், சண்டிலிப்பாய், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா 35 பொதிகளும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்கு 50 பொதிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவற்றை பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த நிலையில் அந்த முயற்சிகள் தற்போது தேக்கமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சியின் அரசியல்வாதி, மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அழுத்தம் கொடுத்ததன் காரணமாகவே இந்த முயற்சிகள் தேக்கமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு தனிநபர்கள் ஊடாகக் கிடைக்கப்பெற்ற நிதியில், பயனாளிகளுக்குரிய உலர் உணவுகள் பொதிகளாக்கப்பட்டு, மாவட்டச் செயலகத்தால் நேரடியாகக் கையளிக்கப்பட்டன. அந்த நடவடிக்கையையும் மாவட்டச் செயலகத்தை நிறுத்துமாறும், அவற்றையும் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குமாறும் பணித்துள்ளார்.

இதற்கிடையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் குறித்த அரசியல்வாதியால் தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் உள்ளவர்களுக்கே வழங்குமாறும், அந்தப் பொருள்கள் வழங்கப்படும்போது அரசியல்வாதியால் அனுப்பப்படும் அவரது உதவியாளர் அல்லது அரசியல்வாதியின் உறவினர் ஒருவர் முன்னிலையே அது வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சில பிரதேச செயலர்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணங்களை பிரதேச செயலகத்தில் விநியோகிக்காது வைத்திருக்கின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் கடமையாற்றும் இரண்டாம் நிலை அதிகாரி ஒருவரும், மேற்படி அரசியல்வாதிக்கு ஆதரவாக பிரதேச செயலர்களுக்கு அழுத்தத்தைப் பிரயோகித்துள்ளார். இருப்பினும் ஒரு சில பிரதேச செயலர்கள், அரசியல்வாதியின் பெயர்ப் பட்டியலுக்கு அமைவாக நிவாரணம் வழங்க முடியாது என்று தெரிவித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகித்துள்ளனர். வேறு சில பிரதேச செயலர்கள் அதனை விநியோகிக்காது காத்திருக்கின்றனர்.

மக்கள் இடரால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அரசின் நிவாரணங்களைக் கூட பெற்றுத் தராத அந்த அரசியல்வாதி யாரோ ஒருவரால் வழங்கப்படும் உதவியைக் கூட தனது ஆதரவாளர்களுக்கு, தான் வழங்குவதைப் போன்று காட்ட முயல்வது தொடர்பிலும் அதிகாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். மேற்படி அரசியல்வாதியின் செயற்பாட்டினால், குடநாட்டில் அன்றாடத் தொழில் செய்வோர் தொடக்கம் வறுமை நிலையிலுள்ள மக்கள் வரையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

## கொரோனா...

ள்ளது.

அதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 176 இலிருந்து 178ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் நேற்றுவரை 44 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தபடியாக புத்தளம் மாவட்டத்தில் 31 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 25 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 13 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மாவட்டங்களில் தலா 7 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 3 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 2 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். காலி, கேகாலை, மட்டக்களப்பு மற்றும் பதுளை மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களைத் தனிமைப்படுத்தும் நிலையங்களில் 35 பேரும், மாத்தறையில் இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் 5 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 5 பேர் நேற்றுக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். சீனப் பெண் உள்ளடங்கலாக இதுவரை 38 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏனைய 135 நோயாளிகளும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை, முல்லேரியா ஆதார வைத்தியசாலை மற்றும் வெலிக்கந்த ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், நாட்டிலுள்ள பல வைத்தியசாலைகளில் தற்போது 257 பேர் கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம22)

## கொரோனா அபாயம்...

அரியாலை, தாவடிப் பகுதிகள், களுத்துறை மாவட்டத்தில் அட்டுலுகம மற்றும் பேருவளை பகுதிகள், கண்டி மாவட்டத்தில் அக்குரணை பகுதி, புத்தளம் மாவட்டத்தில் கடையன் குளம் மற்றும் நாத்தாண்டியவின் ஒரு பகுதி, கொழும்பு மாவட்டத்தில் கிராண்பாஸ் பொலிஸ் பிரிவின் டி வாஸ் லேன், மருதானை பொலிஸ் பிரிவின் இமாமுல் அரூஸ் மாவத்தை, இரத்மலானை அர்ஜனமாவத்தை ஆகிய பகுதிகள், குருநாகல் மாவட்டத்தில் கட்டுபொத்தை கெக்குனுகொல்ல பிரதேசத்தின் ஒரு பகுதி , மாத்தறை மாவட்டத்தில் அக்குரஸ்ஸ மற்றும் கொஹுகொட பகுதிகள் இவ்வாறு முற்றாக முடக்கப்ப ட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க22)

## ஊருக்குள்..

குடத்தனை வடக்கு செல்வா விளையாட்டு கழக இளைஞர்களே இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர். கிராமத்துக்குள் நுழையும் பிரதான பாதையில் தடுப்பு ஒன்றை அமைத்துள்ள இளைஞர்கள், தடுப்புக் கம்பத்தில் மருத்துவக் குணமுடைய வேப்பம் இலையைக் கட்டி, அந்தத் தடுப்பைக் கொண்டு மறியலில் ஈடுபடுகின்றனர். தமது ஊருக்குள் நுழையும் போதும், வெளிச் செல்லும் போதும் கைகளைக் கழுவ வேண்டும், மாஸ்க் அணிய வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அந்த இளைஞர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று பலரும் தெரிவித்தனர். (பு7)

# கொரோனா தொற்றாளர்களின் தொடர்பாடலால் ஆபத்து

கொழும்பு,ஏப்.7

அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் தொடர்பாடல் விசாலமாக உள்ளது. இதனால் மேலும் பல பேர் தொற்றுக்குள்ளாகும் பேராபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இருவர் இன்று (நேற்று) ஜா எல மற்றும் புத்தளம் ஆனமடுவ பகுதிகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளனர்.

அவர்களின் தொடர்பாடல் வலையமைப்பால், அவ்விரு பகுதிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. ஜா எல பகுதியின் ஓட்டோச் சாரதி ஒருவரும் ஆனமடுவ கிவ்ல பகுதி பெண்ணொருவருமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஓட்டோச் சாரதியின் தொடர்பாடல் வலையமைப்பு மிக விசாலமானது. சுகாதார அதிகாரிகள் அது குறித்து ஆராய்ந்து வருகின்றனர். தேவையான நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுப்பார்கள்.

ஆனமடுவப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட பெண் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் கிவ்ல, புத்தளம் 9ஆம் குறுக்குத் தெரு ஆகியவற்றைச் சேர்ந்த 30 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

29 வயதுடைய குறித்த பெண், ஆனமடுவ வைத்தியசாலையில் வேறு நோய் தொடர்பில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளின் போதே அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆனமடுவ ஆதார வைத்தியசாலையின் ஊழியர் படையணியில் பலரும் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றார். (க22)

# ஒருவரால் 50 பேர் தனிமையில்

கொழும்பு,ஏப்.7

கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவருடன் தொடர்பைப் பேணிய 50 பேரைத் தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலி கராபிப்பிட்டிய அக்குரெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 50 பேர் இவ்வாறு தனிமைப்படுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தியத்தலாவை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

17 ஆண்கள், 17 பெண்கள், பெண் குழந்தைகள் 9 பேர் மற்றும் ஆண் குழந்தைகள் 7 பேர் உள்ளிட்ட 50 பேர் தனிமைப்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பணிப்பாளர் நியமனம்

கொழும்பு,ஏப்.7

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாக கப்டன் தேமிய அபேவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாகஎச்.எம்.சி.நிமல்சிறி பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ரூபா பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 7

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்று வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்தது. அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 199.40 ரூபாவாக மத்திய வங்கியால் நேற்று வரை யறுக்கப்பட்டிருந்தது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உலக பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. இலங்கையில் முக்கியமான துறைகள் முடங்கியுள்ளன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ரூபாவின் பெறுமதி பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. (ஒ.5,44)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஊரடங்குத் தளர்வும் ஒட்டி உறவாடுகையும்

உடல் மெலிவதற்காக ஒருவர் ஒரு மாதம் உணவே அருந்தாமல், 'டயட்' டில் இருந்துவிட்டு வந்து, வட்டியும் முதலுமாக அதுவரை சாப்பிடாமல் இருந் தவற்றையெல்லாம் ஒரே வாரத்தில் சாப்பிட்டால் என்னவாகும்? என்ன நோக்கத்துக்காக டயட் இருந் தாரோ அந்த இலக்கை அடையமுடியாமல் இன் னும் உடல் பருமன் அதிகரிக்கவே செய்யும்.

அதைப்போலத் தான் இப்போது இலங்கையில் நிலவும் ஊரடங்கும் அதற்குப் பின்னான தளர்வுக் காலங்களும் இருக்கின்றன. சக மனிதர்களுடனான ஊடாடுதல்களை நிறுத்துவதன் மூலமே கொரோ னாவின் பரவுகையைக் கட்டுப்படுத்த முடியும். இதை விட அதை அழிப்பதற்கு வேறு மார்க்கமெ துவும் இல்லை. எனவே அனைவரையும் வீடுகளுக் குள் முடங்கச் செய்வதன் மூலம் கொரோனா பரவு தற்குரிய ஏதுநிலையை இல்லாமல் ஆக்கவே நாடு முழுதும் ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

எனினும் தொடர்ந்து வீட்டுக்குள்ளேயே இருந்தால் மக்களுக்கான உணவு, மருந்து உள்ளிட்ட அவசிய மான சேவைகளைப் பெறமுடியாத நிலை இருப்ப தனால், அவற்றைப் பெறக்கூடிய வகையிலேயே இடையிடையே ஊரடங்கில் தளர்வுநிலை அறிவிக் கப்படுகின்றது. ஆனால் இதன்போது, நாம் என்ன செய்கிறோம்? காய்ந்த மாடு கம்பில் விழுந்ததைப் போல, எல்லோரும் ஒன்று திரண்டு கடைகளுக் கும், சந்தைகளுக்கும் படையெடுக்கிறோம். அதன்போது ஒருவருக்கொருவர் தமக்கிடையே பேண வேண்டிய குறைந்த பட்ச சமூக இடைவெ ளியான ஒரு மீற்றர் என்பதைக் கூட பேண மறந்த வர்களாகி விடுகிறோம். ஏதோ ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் போல எல்லோரும் நெருக்குப் பட்டு, இணை பிரியாமலேயே ஊரடங்குத் தளர் வின் போதும் பொருட்கொள்வனவுகளில் ஈடுபடு கிறோம். இத்தகைய பொறுப்பற்ற செயற்பாட் டால், என்னதான் ஊரடங்குச் சட்டத்தின் போது, வாசலுக்குக் கூட வராமல் வீடுகளுக்குள் முடங்கி யிருந்து விட்டு வந்தாலும் பயனேதுமில்லை. ஏனெ னில் எவரேனும் ஒரு நோய்க்காவி சுமந்து கொண் டிருக்கும் கொரோனா பரவ ஒரு சிறிய தொடுகையே போதும். அல்லது ஒரு தும்மல் போதும். அருகில் உள்ள அத்தனை பேருக்கும் ஒரே நொடியில் கொரோனா தொற்றிவிடும். பிறகென்ன, தொற்று வாங்கியவர்கள் அதனை உணராமல் வீட்டில் வந்து தம் உறவுகளுக்கு அதைப் பரப்புவார்கள். நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மடங் குக் கணக்கில் அதிகரிக்கும். ஊரடங்கு வாழ்வு முடிவிலியாக நீளும். பின்னொரு நாளில் அது தளர்த்தப்படும் போது பழையபடி முண்டியடித்து, நெருக்கித் தள்ளி, ஒட்டி உறவாடி சந்தைகளுக்கு ஓடுவோம். குறைந்து கொண்டிருந்த கொரோனா மீண்டும் விஸ்வரூபமெடுக்கும் நிகழ்வு தொடர்க தையாகும்.

இப்படியான இருள் சூழ்ந்த வாழ்வுக்குத்தான் நாம் ஆசைப்படுகிறோமா? இனியாவது ஊரடங்குத் தளர்வின் போதும், அவசிய தேவை இருந்தால் மட்டும் வீதிக்கு வாருங்கள். ஊரடங்கின் போது எப்படி இருந்தோமோ அப்படியே ஊரடங்குத் தளர் வின் போதும் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அவசிய தேவைக்காக வெளியில் வரும்போது சுகா தார அறிவுரைகளை கட்டாயம் கடைப்பிடியுங்கள். குறிப்பாக சமூக இடைவெளி பேணல் மிக முக்கிய மானது. இவற்றையெல்லாம் ஒரு விரதம் போல மனக்கட்டுப்பாட்டோடு கடைப்பிடிப்போமானால் கொரோனாவையும், ஊரடங்கு வாழ்வையும் ஒன்று சேர விரட்டியடிக்கலாம்.



# வெறுக்கத்தக்க கருத்துக்களை வெளியிடுவோரை தண்டிக்குக

*மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாரிடம் கோருகின்றது*

**கொழும்பு, ஏப். 7**

**நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுடன் முஸ்லிம்களைத் தொடர்புபடுத்தி, வெறுக்கத்தக்க கருத்துக்களை வெளியிடுவோரைத் தண்டிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாரிடம் கோரியுள்ளது.**

ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா, பதில் பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவலுடன் முஸ்லிம் சமூகத்தினரைத் தொடர்புபடுத்தி சமூக வலைத்தளங்களிலும் சில பிரபல தனியார் ஊடகங்களிலும் வெறுக்கத்தக்க கருத்துக்கள் வெளிவந்தமை எமது கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அனைத்து மக்களினதும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள இந்த நிலையில், இவ்வாறான அருவருக்கத்தக்க கருத்துக்கள் மூலம் ஏற்பட்டுள்ள அமைதியற்ற நிலையைச் சீர்படுத்துவது எமது அணைவினதும் பொறுப்பாகும். இதனால் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது. (ம)

## கப்பலில் வந்த ஜேர்மன் பெண் கொழும்பு வைத்தியசாலையில்

கொழும்பு,ஏப்.7

சொகுசு பயணிகள் கப்பலில் வருகை தந்த, இருதய நோய்க்குள்ளான ஜேர்மனியப் பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

75 வயதான ரோஸ்மேரி மார்கிரட் என்பவர் இருதய நோய்க்குள்ளானமையால், மருத்துவ உதவிக்காக அவர் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இந்தக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததும், அதிலிருந்த இலங்கைப் பணியாளர் ஒருவர் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டார். சர்வதேச சட்டங்கள் மற்றும் இணக்கப்பாடுகளுக்கு அமைவாக, இலங்கைக் கடற்பிராந்தியத்துக்கு பிரவேசிக்கும் கப்பல் தொடர்பில் ஆராய்வதற்கும் வலயங்களுக்குள் ஏற்படும் அவசர நிலைமையின் போது நிவாரணத்தை வழங்குவதற்குமான பொறுப்பு இலங்கைக் கடற்படையினருக்குள்ளது. எனினும், பொறுப்புகளுக்கு அப்பால், உலக நாடே தற்போது எதிர்கொண்டுள்ள சுகாதார சவாலைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான நோக்குடன், ஜேர்மனியப் பெண்ணை இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சகலருக்கும் 5,000 ரூபா

கொழும்பு, ஏப். 7

சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு மேலதிகமாக முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளிகள் உள்ளிட்ட 7 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு 5000 ரூபா கொடுப்பனவு எவ்வித பேதமுமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவருக்கேனும் அது கிடைக்காவிடின் கிராம சேவகரின் ஊடாக அதனைப் பெற்றுக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## சதொசவுக்கு பதில் கூட்டுறவுச் சங்கம்

மன்னார்,ஏப்.7

நானாட்டானில் சதொச விற்பனை நிலையம் இல்லாததால் நானாட்டான் பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அந்தப் பொறுப்பினை யேற்று நடமாடும் சேவை மூலம் நேற்று முதல் மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் விற்பனை செய்தது.

இதன்படி நானாட்டான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் அரிசி, கோதுமை, மா, சீனி உட்பட அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கப்பட்டன.

கடந்த மாதம் 23ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நானாட்டான் பிரதேசத்தில் சதொச விற்பனை நிலையம் இல்லாததால் முசலி சதொச விற்பனை நிலையத்திலிருந்து நடமாடும் சேவை மூலம் வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் முசலிப் பிரதேசத்து சதொசவிலும் போதியளவு பொருள்கள் இல்லாததால் அந்தப் பணியை பலநோக்குக் கூட்டுறவு சங்கம் பொறுப்பேற்று செயற்படுத்தியது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-213)

## மறைந்திருந்த தொற்றாளர்

# 4 வைத்தியர்கள் உட்பட 15 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஏப்.7

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகத் தகவல்களை மறைத்து சேர்க்கப்பட்டிருந்த நபர் ஒருவர், கொரோனா வைரஸ் தொற்றாளர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கொழும்பு, உறுகொடவத்தைப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் சந்தேகத்தின் பேரில் அங்கிருந்து ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர், கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளார். இதனையடுத்து மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் 4 வைத்தியர்கள் உட்பட 15 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வசந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (க-22)

# உணவுக்குத் தட்டுப்பாடு முல்லைத்தீவில் ஏற்படாது

## ஒரு வாரத்துக்கு தேவையான பொருள்கள் கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஏப். 7

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 'சதொச' மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் ஒரு வாரத்துக்குப் போதுமானளவு உணவுப் பொருள்கள் கையிருப்பிலுள்ளன அவ்வாறே தனியாரிடமும் கையிருப்பு உள்ளது. அத்தோடு கொழும்பில் இருந்து தேவையானளவு பொருள்கள் விரைவில் வந்து சேரவுள்ளன. எனவே முல்லைத்தீவில் உணவு பொருள்களுக்குத் தட்டுப்பாடு எதுவும் ஏற்படாது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

முல்லைத்தீவு மாவட்டம் விவசாய மாவட்டம் என்ற ரீதியில் அங்கு அதிகமானோரிடம் நெல் கையிருப்பில் உள்ளது. அதேநேரம் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையான ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 477 பேர் வாழும் நிலையில் அனைவரும் அரிசி கொள்வனவு செய்தால் கூட ஒரு வாரத்துக்கு 193 மெற்றிக்தொன் தேவையான நிலையில் கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் 192 மெற்றிக் தொன் கையிருப்பில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று குறித்த மக்களுக்கு ஒரு வாரத்துக்கு 24 மெற்றிக் தொன் சீனி தேவையான நிலையில் 119 மெற்றிக் தொன் சீனி கூட்டுறவுச் சங்கங்களின் கையிருப்பில் உள்ளது. இவை மாவட்டத்துக்கு 5 வாரத்துக்கு போதுமானதாகவுள்ளது. இதேநேரம் தற்போது 83 மெற்றிக் தொன் மா கையிருப்பில் உள்ளது. நேற்றைய நிலவரத்தின் பிரகாரம் மாவட்டத்திலுள்ள உணவுக் கையிருப்புக்கு உடனடித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் கிடையாது. கொழும்பில் இருந்தும் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன. தனியாரிடமும் குறிப்பிட்டளவு பொருள்கள் கையிருப்பில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (கு-105)



# தொழில் பிணக்கா? முறையிடுங்கள்

கொழும்பு, ஏப். 7

தொழில், பிணக்கு உள்ளிட்ட வியங்களுக்கு, அருகாமையிலுள்ள மாவட்ட உதவித் தொழில் ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக தகவல்களை தொழில் திணைக்களத்தின் இணையத் தளத்தில் அறிந்துகொள்ள முடியும் என்று தொழில் ஆணையாளர் ஏ.விமலவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி பின்வரும் அலுவலர்களினதும், அவர்களின் தொடர்பிலக்கமும் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண உதவி முகாமையாளர் ஏ.தனேஸ், 0771943423, வவுனியா உதவி முகாமையாளர் செல்வி ஜி.சிவரஞ்சனி 0779530841, மன்னார் சிரேஸ்ட அலுவலர் என்.முருகானந்தன் 0773794115, முல்லைத்தீவு சிரேஸ்ட அலுவலர் ரி.இசானி 0770757337, கிளிநொச்சி சிரேஸ்ட அலுவலர் பி.பிரதீபன் 0777110673. (த)





# வவுனியாவில் இலவச மரக்கறி விநியோகம்

வவுனியா,ஏப்.7

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்பட்ட நிலையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் வவுனியா நகருக்கு வருகை தந்தனர். இந்த நிலையில் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றால் பொதுமக்களுக்கு மரக்கறிவகைகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

சுமார் 25 ஆயிரம் கிலோ மரக்கறிவகைகள் இதன்போது விநியோகிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

# பிரபல சிங்கள இசையமைப்பாளர் மறைவு

கொழும்பு, ஏப்.7

பிரபல இசையமைப்பாளர் ஜயந்த ரத்னாயக்க தனது 51 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

இவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையிலேயே நேற்றுக் காலமானார்.

இவர் பிரபல பாடகர் விக்டர் ரத்நாயக்கவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாய்களின் பசியை தீர்க்கும் இளைஞர்கள்

கிளிநொச்சி, ஏப்.7

கிளிநொச்சிப் பகுதியில் இளைஞர்கள் சிலர் சேர்ந்து உணவு சமைத்து நாய்களுக்கு வழங்கி வரும் செயற்பாடு அனைவரினதும் பாராட்டைப் பெற்றுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. மக்கள் நடமாட்டம் இல்லை. உணவகங்கள் மூடப்பட்டுள்ளது. இதனால் தெருவில் திரியும் நாய்களுக்கு உணவு கிடைப்பதில்லை.

இந்த நிலையை அறிந்த இளைஞர்கள் சிலர் சேர்ந்து மீன் உணவு சமைத்து அதை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று வீதிகளில் திரியும் நாய்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இது தொடர்பில் அந்த இளைஞர்கள் கருத்து தெரிவிக்கையில்,

"மக்களுக்கே அன்றாடச் சாப்பாட்டுக்கு உணவு பற்றாக்குறை இருக்கும்போது நாய்களுக்கு இப்போது உணவு அவசியமா? என சிலர் கேள்வி எழுப்பி உள்ளனர்.

மக்களுக்கு ஏதோ வகையில் உணவு கிடைத்து வருகிறது. ஆனால் தற்போதைய நிலையில் நாய்களுக்குச் சாப்பாடு வழங்க யாரும் யோசிக்க மாட்டார்கள். இதனால் நாய்கள் உணவின்றித் தெருவோரங்களில் இறந்து கிடக்கும் நிலை ஏற்படும். எனவே இந்தப் பணி எமக்கு மனதுக்கு நிறைவை தருகிறது" என்று தெரிவித்தனர். (ஐ-7)





# தமிழரைக் கொல்ல பட்டினி நிலையா?

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பு விசனம்

கிளிநொச்சி,ஏப்.7

இலங்கை அரசாங்கம் சலுகைகள் என அறிவித்த விடயங்கள் எவையும் எமது பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவை பெயரளவில் மட்டுமே உள்ளது என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டு, நோயின் தாக்கம் தொடர்பான அச்சமும் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. அன்றாடம் உழைத்து வாழ்ந்த மக்களும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் உழைப்புமின்றி, பொருளாதார பலமுமின்றி, பட்டினி நிலையையும் எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் சலுகைகள் என அறிவித்த விடயங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மீன் ரின், பருப்பு, முட்டை போன்ற பொருள்கள் உரிய விலையில் கிடைக்கும் எனக் கூறியதும், வங்கிக்கடன்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்ட சலுகை விடயங்களும் ஊடகங்களில் வெளி வந்த செய்தியாக மட்டுமே உள்ளன.

கொரோனா நோயிலிருந்து மக்களைக் காக்க முயற்சிப்பதாகக் கூறும் கோத்தபாய அரசாங்கம், போலி வாக்குறுதிகள் ஊடாக தமிழ் மக்களை ஏமாற்றி, பட்டினியால் மக்களைக் கொல்லப்போகிறதா? என்னும் சந்தேகமும் ஏற்பட்



டுள்ளது.

இனவழிப்பின் மூலம் தமிழர் பொருளாதாரத்தைச் சிதைத்த கோத்தாபய அரசாங்கம் மீண்டும் தமிழரைப் பட்டினியால் அழிக்க முயலாமல், உரிய நிவாரணங்கள், பாதிக்கப்படும் மக்களைச் சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (கு-6)



**நாம் எல்லோரும் இப்போது வீட்டில் இருக்க வேண்டியிருக்கின்றது. குறிப்பாக எமது பிள்ளைகளும் வீட்டிலேயே அடைந்தபடி இருக்கிறார்கள். பிள்ளைகளைக் கையாளும்போது நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை?**

Dr. சா. சிவயோகன்
உளமருத்துவ நிபுணர்

ஓர் அகநோக்கு 04

# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம்:

இது ஒரு சுவாரசியமான முரண். எமது பிள்ளைகள் எமது வீடுகளில் தொடர்ந்து இருப்பது என்பது எமக்கு அவர்கள் அடைந்து இருப்பதாக அர்த்தம் கொள்ள வைக்கின்றது. அதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. பிள்ளைகள். குறிப்பாகப் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் அல்லது வேலைக்குச் செல்லும் இளைய வயதினர் தமது தேவைகளுக்கும், இயல்புகளுக்கும் ஏற்ப எந்த நேரமும் அரக்கப்பரக்க ஓடியபடி, ஓர் இடம் மாறி வேறோர் இடத்துக்குச் சென்றபடி இருப்பார்கள். அவர்கள் வீடுகளில் நிற்கும் நேரம் என்பது, நித்திரை கொள்ளும் நேரத்தைத் தவிர்த்துப் பார்த்தால், மிகவும் குறைவாகவே இருக்கும். அதிலும், வீடுகளில் பெற்றோரும் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால் பெற்றோர் - பிள்ளைகள் சந்திப்பு என்பது மிகவும் அரிதாக, எப்போதாவது நிகழும் ஒரு விடயமாகவே அமைந்திருக்கும்.

இப்போது நிலைமை மாறியிருக்கின்றது. எல்லாப் பிள்ளைகளும் வீடுகளில் இருக்கிறார்கள். அதுபோல் அவர்களைப் பெற்றவர் பலரும் வீடுகளில் இருக்கிறார்கள். பிள்ளைகள் பெற்றோரை, அவர்களின் நடவடிக்கைகளைப் புதினமாகப் பார்க்கிறார்கள். பெற்றோரோ தமது பிள்ளைகளின் உண்மையான இயல்புகளையும், சுபாவங்களையும் ஆச்சரியத்தோடு விழிதிறந்து பார்க்கிறார்கள். தமது பிள்ளைகள் பற்றி இதுவரை காலமும் தாம் வைத்திருந்த கணிப்புகள் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டிய தேவை இருப்பதனை அவர்கள் உணரத் தலைப்படுகிறார்கள்.

நாம் விரும்பியோ, விரும்பாமலோ நாமெல்லோரும் இப்போது ஒன்றாக இருக்கிறோம். இந்தக் காலப்பகுதியை சில தாய் தந்தையர்கள் தமது பிள்ளைகளை அறிந்து கொள்வதற்குக் கிடைத்த ஒரு பொற்காலமாக எடுத்துக் கொள்கிறார்கள். வேறு சிலரோ, பிள்ளைகளின் நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பல்வேறுபட்ட உணர்ச்சிகளோடு அல்லாடுகிறார்கள். பிள்ளைகளின் பார்வையிலும் வீடுகளில் தொடர்ந்து இருப்பது என்பது ஒரு கலவையான மனநிலையையே ஏற்படுத்துகின்றது. பாடசாலை அல்லது வேலைக்குப் போகத் தேவையில்லை என்பது ஆரம்பத்தில் மனமகிழ்வினைக் கொடுத்தாலும், நாட்கள் செல்லச் செல்ல, பிள்ளைகள் தமது மாற்றுச் சூழல், நண்பர் குழாம் என்பவற்றை இழந்து, சலிப்பாக உணர்ந்து, மனம் சோர்வடைகிறார்கள்.

ஆரோக்கியமில்லாத இயக்கப்பாடுகளையும், அதீத உணர்ச்சி வெளிப்பாடுகளையும் உடைய குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் அந்தக் கொந்தளிப்புகளில் சிக்கிச் சின்னாபின்னமடைகிறார்கள். இவ்வாறு, தற்போது ஏற்பட்டிருக்கும் ஒரு சிக்கலான நிலையிலும், பிள்ளைகளின் மனங்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு நாம் செய்யக் கூடிய சில விடயங்கள் பற்றி இனி நோக்குவோம்.

முதலில் நாம் பிள்ளைகளுக்குத் தேவையான வெளியை வீடுகளில் ஏற்படுத்திக் கொடுப்போம். இங்கு தேவையான வெளி என்று விபரிப்பது ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு அறை ஒதுக்கி அப்பிள்ளையைத் தனியே விடுவது அல்ல. மாறாக, எவ்வளவு சிறிய வாழிடமாக இருந்தாலும் பிள்ளைகளுக்குரிய குறிப்பான சில இடங்களைத் தெரிவு செய்து, அவர்கள் தத்தமது இடங்களில் சுயாதீனமாக இருப்பதற்கு உதவி செய்தல் என்பதனையே அது கருதி நிற்கின்றது. பிள்ளைகள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் தாம் விரும்பியபடி இருப்பதற்கு, தாம் விரும்பிய செயல்களைச் செய்வதற்கு அனுமதியளித்தல் மிகவும் முக்கியமானது. பிள்ளைகள் வீட்டில் இருக்கிறார்கள்தானே என்றுவிட்டு, அவர்கள் மீது வழமைக்கு மாறான அதீத அக்கறை கொண்டு, அல்லது இவ்வளவு நாளும் அவர்களை வடிவாகக் கவனிக்காமல் விட்டுவிட்டோமே என்ற குற்றவுணர்விலிருந்து விடுபடுவதனை இலக்காகக் கொண்டு, அவர்களுடைய ஒவ்வொரு விடயங்களிலும் தலைப்போட்டுக் கொண்டிருப்பது என்பது ஆரோக்கியமாக அமையாது. அது முரண்பாடுகளை வளர்த்து, எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடும்.

அவரவர் தமக்குரிய வெளிகளுக்குள் இருக்கின்றபோது, அல்லது அவ்வாறு இருப்பதற்கு வழிசெய்கின்றபோது பிரச்சினைகள் குறைந்து விடுகின்றன. பிள்கைளுக்குரிய சுயாதீனமான வெளிகள் கிடைக்கின்ற பொழுது, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான இடைவினை ஒரு சமநிலைக்கு வருகின்ற பொழுது, வீடுகளில் அமைதி நிலவுகின்றது.

இந்த அமைதியான சூழலைப் பேணியவாறு, பிள்ளைகளும் பெற்றோரும் எவ்வாறு ஒன்று சேர்ந்து கருமங்களை ஆற்றுவது என்பதனைத் திட்டமிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்தலாம். நாங்கள் எமது பெற்றோரிடமிருந்தும், பெற்றோரின் பெற்றோர்களிடமிருந்தும், மூத்தவர்களிடமிருந்தும் கற்றுக் கொண்ட எத்தனையோ நுண்திறன்களை இந்தக் காலப்பகுதியில் நாம் எமது பிள்ளைகளுக்குக் கடத்தலாம். மிகவும் எளிமையான விடயங்கள் போலத் தோற்றமளிக்கும் பலவகையான திறமைகளை நாம் சந்ததிக் கடத்துகைக்கு உட்படுத்தலாம். ஒரு முடிச்சை எவ்வாறு போடுவது, முற்றத்தைத் தூசு எழும்பாமல் எவ்வாறு கூட்டுவது, ஒரு கோப்பை தேநீரை சுவையாகத் தயாரிப்பது எப்படி, முட்டைப் பொரியலை எவ்வாறு பதமாகத் தயாரிப்பது என, நாம் எமது பிள்ளைகளின் வருங்காலத் தேவைகளுக்கும், தற்கால விருப்புகளுக்கும் ஏற்ற திறன்களை அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கலாம். பிள்ளைகள் தமது எதிர்கால வாழ்க்கையைச் சுயாதீனமாகக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான திறன்களை அடையாளங் கண்டு, அவற்றை வளர்த்து விடுதல் முக்கியமானது. திறன்களைப் பழக்குகின்றபோது, புதிதாக ஒரு புதிய கற்றல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்ற நினைப்பு வராமல், பிள்ளைகளோடு நாமும் சேர்ந்து வேலை செய்தபடி, அவர்களின் திறன் விருத்திக்கு உதவலாம். பல விடயங்களில் பிள்ளைகளின் முதன்மையான ஆசிரியர்களாகப் பெற்றோர்களே இருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையும், இந்தக் கடினமான காலத்தைக் கடந்து செல்லும்போது குறைந்தது ஓரிரு நுண்திறன்களையாவது கற்றுக் கொள்ளுதல் நல்லதல்லவா?

இந்தக் காலத்தில் கிடைக்கின்ற நேர இடைவெளிகளைப் பயன்படுத்தி, பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வயதுக்கும் விருத்திக்கும் ஏற்ப, தமது கடந்த காலம் பற்றியும், தாம் கடந்து வந்த பாதை பற்றியும், உற்றார் உறவினர் பற்றியும் அவர்களோடு சிறிது நேரம் அளவளாவுவது பிரயோசனமானது. தற்காலத்தில் வாழுகின்ற பல பிள்ளைகள் தமது பெற்றோரின் கடந்த காலக் கஷ்டங்களைப் பற்றித் தெரியாதவர்களாக வளர்ந்து வருகிறார்கள். துரதிஷ்டவசமாக, பெற்றோரும் தமது பிள்ளைகளைக் கஷ்டம் என்றால் என்ன என்பது தெரியாமலே வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போதைய இடர்காலமானது, ஒவ்வொருவருடைய வாழ்விலும் பற்பல சந்தர்ப்பங்களில் எவ்வாறு இடர்கள் வந்து போயின என்பதனை விளக்கிக் கூறுவதற்கும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் மிகவும் அனுகூலமான காலமாக இருக்கிறது.

மருத்துவ உலகம் எவ்வளவுதான் ஆலோசனை வழங்கினாலும், எமது வழமையான காலத்தில் உடற்பயிற்சி செய்தல், வீட்டில் போஷாக்கான உணவுகளைத் தயாரித்தல் போன்ற ஆரோக்கியமான செயற்பாடுகளை, மருத்துவர்கள் உட்பட, நாம் அனைவரும் மிகவும் குறைந்த அளவுகளிலேயே கடைப்பிடித்து வந்திருக்கிறோம். தற்போது வீடுகளில் ஒன்றாக இருப்பதற்கு எமக்குக் கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பு இவ்வாறான ஆரோக்கியமான செயற்பாடுகளில் குடும்பத்தில் உள்ள அனைவரும் இணைந்து செயற்படுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது.

பிள்ளைகள் கொவிட்19 தொற்றுப் பற்றிய சரியான தகவல்களை அறிந்திருப்பதுவும் முக்கியமானது. தற்பொழுது இந்த வைரஸ் தொற்று சமுதாயத்தில் உள்ள பலருக்குப் பரவிவிட வாய்ப்பிருக்கின்றது என நம்பப்படுவதால், அவ்வாறான துரதிஷ்டமான நிலைமைகள் குடும்பங்களில் நிகழும்பொழுது பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான பருமட்டான எண்ணங்களையாவது பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளுதல் முக்கியமானது. இந்த வைரஸ் தொற்றுப் பற்றியும், அது சிலவேளைகளில் கடுமையானதாக அமைந்து பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம் என்பது பற்றியும், பிள்ளைக ளுக்கு அவர்களின் வயது மற்றும் அனுபவங்களுக்கேற்ப எளிமையான சொற்களில் கூறி விளங்க வைப்பது அவசியமானது. கலைச்சொல் ஒன்றை உபயோகிப்பதாகவிருந்தால், ஓர் இடர்காலத்துக்கான தயார்ப்படுத்தல் எனும் விடயம் நடைபெறுவது நன்மையானது.



இவற்றிற்கு மேலாக, இந்தக் காலப்பகுதியிலும் பிள்ளைகள் தமது வழமையான செயற்பாடுகளின் தொடர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்குப் பெற்றோர் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். படிப்பது, விளையாடுவது, தொலைக்காட்சி பார்ப்பது, நண்பர்களோடு அளவளாவுவது போன்ற அனைத்து விடயங்களும் தொடர்ந்து கொண்டிருப்பதனை பெற்றோர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆயினும், ஒரேயடியாகப் படி படி என்று அவர்களை நச்சரிப்பதுவும், அவர்கள் நீண்ட நேரத்திற்கு சமூக ஊடகங்களிலும், இணையவழிப் பொழுது போக்குகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதற்கு அனுமதிப்பதுவும் ஆரோக்கியமானவையல்ல.

இறுதியாக நான் வழமையாகப் பெற்றோருக்குச் சொல்லும் சில அடிப்படையான விடயங்களைக் கூறிவைக்க விரும்புகிறேன். முதலாவதாக, வீடுகளில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானங்களாயினும், அது பெற்றோர்களாலேயே எடுக்கப்பட வேண்டும். நிச்சயமாக, பிள்ளைகளின் விருப்புகள் கேட்டறியப்பட்டு தீர்மானங்கள் அதற்கேற்ப எடுக்கப்படலாம். இரண்டாவதாக, பெற்றோரில் ஒருவர் பிள்ளைகள் தொடர்பான ஒரு தீர்மானத்தை எடுக்கின்ற பொழுது, மற்றையவர் அதனை உடனடியாக, வெளிப்படையாக நிராகரிக்கக் கூடாது. உடன்பாடில்லாத அபிப்பிராயங்களைப் பற்றி பெற்றோர் பிறிதொரு நேரத்தில் தம்முள் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரலாம். மூன்றாவதாக, பிள்ளைகளுக்கு முன்னால் பெற்றோர் தமது முரண்பாடுகளையும், சண்டை சச்சரவுகளையும் வெளிக்காட்டக் கூடாது.

பிள்ளைகள் பெரியவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்கிறார்கள். இதனை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருப்பது நல்லது.

# கொரோனா தொற்றாளர்கள் வெளியிலும் இருக்கலாம்!!!

## ஊரடங்கு நீடிக்கப்பட வேண்டும் என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தேவநேசன்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாணத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளுடன் தொடர்புடைய அனைவரையும் இனங்கண்டு தனிமைப்படுத்தியுள்ளோம் என்று சொல்ல முடியாது. அடையாளப்படுத்தப்படாதவர்களும் இருக்கலாம். எனவே ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்பட வேண்டும். தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களையும் எதிர்வரும் புத்தாண்டு வரையில் விடுவிக்கக் கூடாது. இவ்வாறு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏகாம்பரநாதன் தேவநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் தெரிவித்ததாவது:

கொரோனா தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் ஓரளவு ஏற்பட்டுள்ளது. மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்து வந்தோம். இதன்போதுதான் சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் தொடர்பான விவகாரமும் தொடங்கியது. அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதும், உடனடியாகவே நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வேகமாக எடுத்தோம்.

அவருடன் பழகியவர்கள் நெருங்கிய தொடர்புடையவர்களை தனியாகவும், அவரது ஆராதனையில் பங்கேற்றோர் உள்ளிட்ட ஏனையோரை தனியாகவும் தனிமைப்படுத்தினோம். இந்தத் தொடர் சங்கிலியில் தொடர்புடைய எல்லோரையும் நூறு வீதம் சரியாக அடையாளப்படுத்தி தனிமைப்படுத்தி விட்டோம் என்று சொல்ல முடியாது.

ஓரளவு சரியானவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தினோம். ஆராதனையில் பங்கேற்றவர்கள் தொடர்பில் பதிவு செய்யுமாறு அலைபேசி இலக்கத்தை அறிவித்தபோதும் 40பேரே தாமாகத் தொடர்பு கொண்டு தகவல்களைப் பதிவு செய்தார்கள். ஏனையோரை நாம் வேறு வேறு மூலங்கள் ஊடாகத் தேடியே கண்டறிந்து தனிமைப்படுத்தினோம்.

இவ்வாறு தனிமைப்படுத்தியுள்ள 319 பேரையும் இப்போதைக்கு விடுவிப்பது பொருத்தமாக இருக்காது. அவர்கள் எல்லோருக்கும் கொரோனாச் சோதனை செய்யப்படவில்லை. இப்போது 50 பேருக்கே செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று முடிவு வந்தாலும், மூன்று தடவை சோதனை செய்ய வேண்டும். அதன் பின்னரே அவர்களை விடுவிக்க முடியும்.

எனவே இப்போதைக்கு ஊரடங்கை நீக்குவதும் பொருத்தமானது அல்ல. மேலும், எதிர்வரும் புத்தாண்டு வரையில் தனிமைப்படுத்தல் தொடரவேண்டும், என்றார். (ஒ,5)

## 3,169 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஏப்.7

தனிமைப்படுத்தில் செயற்பாட்டை முழுமையாக பூர்த்தி செய்த சுமார் 3ஆயிரத்து 169 பேர் இதுவரையில் அந்தந்த நிலையங்களில் இருந்து வெளியேறியுள்ளனர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கையின் பல பாகங்களிலும் பலர் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டனர். கொரோனா தொடர்பாக தொடர்ந்து 14 நாள்கள் அவர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன. பரிசோதனைகளின் பின்னர் அவர்களுக்குத் தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டால் அவர்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றனர். இவ்வாறே இதுவரை 3ஆயிரத்து 169 பேர் தனிமைப் படுத்தல் நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். தியத்தலாவை மற்றும் புனானை தனிமைப்படுத்தும் நிலையங்களில் இன்னும் சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி மேலும் கூறினார். (ப)

## பாதிப்பு 1,350,000 உயிரிழப்பு 72,000

சீனாவின் வுகான் மாநகரில் கடந்த டிசெம்பர் மாதம் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸால், இதுவரை சுமார் 13 லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 72 ஆயிரம் பேர் உயிரி ழந்தனர். சீனாவில் கொரோனா தோற்றம்பெற்றாலும் சீனாவை விட பல்வேறு நாடுகள் தற்போது அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளாக உள்ளன. அதிகப் பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும் அதிக உயிரிழப்பைச் சந்தித்த நாடு களின் பட்டியலில் இத்தாலி முதலிடத்திலும் உள்ளன. (ம)

---

### மந்திகையில்...

ஆய்வுகூடப் பரிசோதனை அறிக்கை கிடைத்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவர் கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி கம்போடியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளார். நேற்று அதிகாலை 2 மணிக்கு மந்திகை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். அவர் ஆஸ்துமா நோயாளி. கடந்த மூன்று நாள்களாக அவருக்கு காய்ச்சல், தடிமன் உள்ளிட்டவை காணப்பட்டதால் மந்திகை மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். எனினும் அவர் உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணத்தை கண்டறிவதற்கு மாதிரிகள் பெறப்பட்டு கொரோனா தொற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. எனினும் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என பரிசோதனை அறிக்கை கிடைத்துள்ளது, என்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஒ,5)

### 8 பேருக்கும்...

கப்பட்ட நிலையில் அவர்களுக்கு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது. இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ,5)

### கொரோனா சோதனை..

காரிகள் சங்கம்வலியுறுத்தியுள்ளது.

“வட மாகாணத்துக்கு உட்பட அனைத்து மாவட்டங்களிலும் இந்த மூன்று நடைமுறையையும் மிக மிக இறுக்கமாக கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் . பொலிஸாரைப் பயன்படுத்தி ஊரடங்கு நேரத்தில் 100 வீதம் மக்கள் வெளியே நடமாடாமல் தடுக்க வேண்டும்.

ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டதுக்குச் செல்வதை முற்றாகத் தடை செய்ய வேண்டும். நோய் பரவுவதற்குப் பிரதான காரணம் இதுவே.

கொரோனா தொடர்பான பரிசோதனையை 3 தடவைகள் மேற் கொள்ள வேண்டும். பரிசோதனை முடிந்து வீடு சென்ற சிலருக்கு கூட தொற்று இருப்பதாக பின்னர் கண்டறியப்பட்டது. ஆகவே இந்த 3 மூன்று விடயங்களை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும்” என்று அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது. (த,6)

### 15273...

காலப்பகுதியில் 104 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் கடந்த மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் இதுவரையான காலப்பகுதியினுள் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் 15 ஆயிரத்து 273 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, 3 ஆயிரத்து 855 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### வெகு விரைவில்...

ளுமன்றத்தை கூட்டவும் முடியாது. நாடாளுமன்றத்தைக் கூட்டும் நிலைப்பாட்டில் நான் இல்லை. வெகு விரைவில் தேர்தலை நடத்துவதே எனது எதிர்பார்ப்பு. இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபயவுக்கும், சஜித் பிரேமதாச தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன்போதே கோத்தாபய ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டில் அவசர சட்டமொன்றை உருவாக்கிக்கொள்வது தவிர்ந்து வேறு எந்தக் காரணம் கொண்டும் நாடாளுமன்றத்தை கூட்ட முடியாது. அரசமைப்பில் அதற்கான இடமில்லை. அவரச நிலைமையை பிரகடனப்படுத்தும் எந்த நோக்கமும் எனக்கில்லை.

நாட்டில் ஒரு நெருக்கடி நிலைமை உருவாகியிருக்கின்ற காரணத்தால் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த கால தாமதம் ஏற்பட்டுள்ளது. அது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு என்னிடம் தெளிவுபடுத்தியுள்ளது. இப்போது தேர்தலை நடத்த முடியாது. ஆகவே முதலில் மக்கள் அமைதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கிக்கொடுக்க வேண்டும். அதில் உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பை நான் எதிர்பார்த்துள்ளேன். தேர்தலை நடத்தக் கூடிய சூழலை உருவாக்கி வெகு விரைவில் அதனைச் செய்யவே நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கிடையில் நாடாளுமன்றம் கூட்டப்படாது, என்றார். (ஒ,5)

### தொலைபேசி...

செ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாணவர்களின் பாடம் சார் சந்தேகங்களை தீர்ப்பதற்கான கைத்தொலைபேசிச் செயலி ஒன்று பரிசோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை கூகிள் பிளே ஸ்ரோரில் EMIS NP எனத் தேடி தரவிறக்கிக் கொள்ள முடியும். ஆசிரியர்களை இதில் இணைந்து கொண்டு மாணவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாணவர்களினால் முன்வைக்கப்ப(டு)கின்ற கேள்விகள் அந்தப் பாடம் சார்பாக பதிவு செய்யப்பட்டு, ஆசிரியர்களுக்கு விடையளிப்பதற்காக முன்வைக்கப்படும். ஆசியர்களும் மாணவர்களும் கேள்வி பதிலினை எழுத்து மூலமாகவோ அல்லது புகைப்படம் மூலமாகவோ முன் வைக்கலாம். முன்வைக்கப்படுகின்ற விடயங்கள் மாகாணக் கல்வித் திணைக்கள அலுவலர்களால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரே செயற்படுத்தப்படும் என்றார். (ப-422)

### ஆவா..

யவர்கள் இராணுவத்தினரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டனர். அந்தக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர். வினோதன் உள்ளிட்ட பலர் தப்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த பிறந்தநாள் கொண்டாட்டம் மல்லாகம் சேர்ச் லேனில் நேற்று மாலை இடம்பெற்றது. அதுதொடர்பில் தகவல் கிடைத்ததால், அந்த வீட்டை இராணுவத்தினர் முற்றுகையிட்டுள்ளனர். அதன்போதே மேற்படி இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. வினோதன் உள்ளிட்ட பலர் இராணுவத்தினரின் வருகையறிந்து அங்கிருந்து தப்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-106)

# சந்தனமடுக் காட்டில் கஞ்சாத் தோட்டம்

## இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம் சிக்கியது



மட்டக்களப்பு, ஏப்.7
மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி சந்தனமடுக் காட்டுப் பகுதியில் கஞ்சாத் தோட்டம் மற்றும் கசிப்பு கொள்கலன் என்பவற்றை வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.
வாழைச்சேனை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து எட்டு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் கஞ்சாத் தோட்டம் மற்றும் கசிப்பு கொள்கலன் என்பன வெவ்வேறு இடங்களில் கைப்பற்றப்பட்டன.
இந்தச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். எனினும் இவர்கள் தொடர்பான விசாரணைகளை இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ப-150)

# கொமர்ஷல் வங்கி நாளை பருத்தித்துறையில் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.7
கொமர்ஷல் வங்கியின் பருத்தித்துறை கிளையின் நடமாடும் வங்கிச்சேவை ஒன்று நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
குடத்தனை, நாகர்கோவில், மருதங்கேணி பிரதேசங்களில் மக்கள் அதிகமாக நடமாடும் கேந்திர நிலையங்களில் இச்சேவை இடம்பெறவுள்ளது. காலை 08.30மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இடம்பெறும் இச் சேவையில் தன்னியக்க பணப்பரிமாற்றச்சேவை, கருமபீட கொடுக்கல் வாங்கல் போன்றவற்றை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கொரோனாத் தாக்கம் காரணமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால், வங்கிகளின் சேவைகளும் தடைப்பட்டுள்ளன. இதனால் வாடிக்கையாளர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டே நாளை வடமராட்சியில் கொமர்ஷல் வங்கியின் பருத்தித்துறை கிளையால் நடமாடும் வங்கிச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (ப26)

# கர்ப்பிணிகளுக்கான அவசர அறிவித்தல்

கொடிகாமம், ஏப்.7
கொரோனா நோய்த் தொற்று பரவலாக இடம்பெற்று வரும் நிலையில், கர்ப்பிணித் தாய்மாருக்கு சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் திணைக்களம் சில அறிவித்தல்களை வழங்கியுள்ளது.
காய்ச்சல், குருதிப்பெருக்கு, அதிக தலைவலி, மூச்செடுப்பதில் அசௌகரியம், பார்வை அசௌகரியம், வலிப்பு, நெஞ்சு /வயிறு நோவு, சிசுவின் துடிப்பு குறைவு, உடல் வீக்கம்,வேறு நெருக்கடியான அசௌகரியங்கள் போன்றன கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படுமாயின் அவர்கள் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடவேண்டும். கர்ப்பிணிகள் இது தொடர்பாக தங்களுடைய குடும்ப நல மருத்துவ மாதிடம் தெரிவிக்கவேண்டும்,
மேலதிக தகவல்களைப் பெற 'சுவசெரிய' தொலைபேசி இலக்கமான 1999 என்ற எண்ணுக்கு தொடர்புகொள்ள வேண்டும் என்று சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் திணைக்களம் அறிவித்துள்ளது (ப-159)

## மாணிக்கக்கல் அகழ்ந்த ஐவர் கைது

ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளையில், பொகவந்தலாவ லொய்னோன் தோட்டப் பகுதியில் ஆறு ஒன்றில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.
பொகவந்தலாவப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர். மாணிக்கக்கல் அகழ்வு க்குப் பயன்படுத்தபட்ட உபகரணங்களை யும் பொலிஸார் மீட்டனர். (க)

# நோயாளர் வீடு தேடி கிளினிக் மருந்துகள்



யாழ்ப்பாணம், ஏப்.7
கொரோனாத் தொற்றுகாரணமாக ஊரடங்கு நடைமுறையில் இருப்பதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைகளில் கிளினிக் மருந்துகளைப் பெறுபவர்கள் வெளியில் செல்ல முடியாத நிலையில் பலத்த சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.
அவ்வாறு சிரமங்களை எதிர்கொண்டுள்ள வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கான மருந்துப்பொருள்களை அவர்களின் வீடுகளுக்கே தினமும் கொண்டுசென்றுகையளிக்கும் பணிகளை இளைஞர் வாழ்வாதார வலுவூட்டல் ... வலி ... பர் சங்கத்தினர் முன்னெடுத்துள்ளனர். (ப-222)

# மரண அறிவித்தல்

## சந்திரமூர்த்தி செல்வக்குமார்



கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த சந்திரமூர்த்தி செல்வக்குமார் நேற்று 06.04.2020 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி சந்திரமூர்த்தி மற்றும் சந்திரமூர்த்தி சீதாலக் ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும், செல்வக்குமார் ராஜகுமாரியின் அன்புக் கணவரும், அபராஜிதன் (கம்போடியா), பிருதிவி ராஜன், கோட்டீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அ.தமிழரசியின் மாமனாரும், எச்.மாலதி (ஜேர்மனி), க.சாந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற செ.ஆதித்த குமார் மற்றும் கு.திருமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகசபை சிவஞானசுந்தரத்தின் மைத்துனரும், சு.ரவிவர்மா, காலஞ்சென்ற சு.ரகுவர்மன் மற்றும் செ.திவ்யா (ஜேர்மனி), க.மிதிலா (ஜேர்மனி), கி.அபிராமி (ஜேர்மனி), கு.சண்முகேஸ் (பிரான்ஸ்), கு.ஐங்கரன் (பிரான்ஸ்), கு.வைஷாலி (பிரான்ஸ்), ஆ.தார்மிகா, ஆ.சாயினி, சி.சுகந்தன் (ஆஸ்திரேலியா), சி.ஜெயந்தன் (கனடா), சி.பிருந்தன் (கனடா), காயந்திரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.04.2020 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல்12 மணிக்கு நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
94772690433

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 12 . 1940



மறைவு
05 . 04 . 2020

## திருமதி சிவபாக்கியவதி சாம்பசிவம்

யாழ். மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியவதி சாம்பசிவம் (05.04.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் சுந்தரி தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு திலகவதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் (முன்னாள் கணக்காளர் சண்முகம் அன்சன்ஸ்-வவுனியா) மற்றும் சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை M.L.T. திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிறீபத்மாவதி (ஓய்வுநிலை அதிபர்) சற்குணராசா, நித்தியானந்தம் (கனடா), பாமினி (D.A சாங்கானை) காலஞ்சென்ற சுதர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற விக்னேஸ்வரராசா (ஆசிரியர்) மற்றும் ஜெயந்தி (ஆசிரியை), கௌசியா (கனடா), சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், டிஹான், கிருத்திகாயினி, விதிர்சிகன் யதுஷாயினி, ஷாணவி, ஷாருஹி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாரீசன்கூடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# மிருகங்களையும் கொரோனா தாக்கும் புலிக்குத் தொற்றியமை உறுதியானது!

**வொஷிங்டன், ஏப்ரல் 7**

**அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புலிக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா மனிதர்களில் இருந்து மனிதர்களுக்கு மட்டுமே பரவும். அது மிருகங்களைத் தாக்காது என்று ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், இந்தக் கருத்துக்கள் அனைத்தும் தற்போது பொய்மைப்பட்டுள்ளன.**



சீனாவின் வுகான் மாநகரில் டிசெம்பரில் அவதானிக்கப்பட்டது கொரோனா வைரஸ். டிசெம்பர் 31ஆம் திகதியன்று கொரோனா பற்றி உலகுக்கு பெரும் எச்சரிக்கை விடுத்தது சீனா. கொரோனா வைரஸ் மனிதர்களில் இருந்து மனிதர்களுக்குப் பரவும் என்று எச்சரித்த சீனா, அந்த அறிக்கையில் ஒரு பகுதியில் கொரோனாவால் விலங்குகள் பாதிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தது.

உலக அளவில் இதுவரை சுமார் 13 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 72ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா விலங்குகளுக்கும் பரவும் என்ற இமாலய எச்சரிக்கை விடுத்துள்ளது அமெரிக்கா.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள தேசியப் பூங்காவொன்றில் உள்ள புலி ஒன்றுக்கு கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அந்தப் புலி தனிமைப்படுத்தப்பட்டதுடன் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அந்தப் புலியை வைத்து சிலபல ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

## ஜப்பானில் அவசரநிலை

கொரோனாவின் தாக்கம் ஜப்பானில் அதிகரித்து வருவதை அடுத்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பால் பெரும் அழிவைச் சந்திக்கக்கூடிய வாய்ப்புள்ள நாடுகளின் பட்டியலில் ஜப்பானும் ஒன்று. அந்த நாட்டின் டோக்கியோ உள்ளிட்ட முக்கிய நகரங்களில் இன்று முதல் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் இது தவிர்க்க முடியாத அறிவிப்பு என்றது ஜப்பான் (ம)

## கொரோனாவின் பிடியில் போரிஸ்

லண்டன், ஏப்ரல் 7

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கொரோனா வைரஸால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த அவர் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால் பிரிட்டனில் பதற்றம் பரவியுள்ளது.

சீனாவின் வுகான் மாகாணத்தில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸால் ஐரோப்பிய நாடுகள் தற்போது அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பிரிட்ட னில் அரசியல் தலைமைகளுக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் கொரோனாவால் பாதிக்கப்பட்டு ஏற்கனவே நலம்பெற்றார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தார். தற்போது அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனால் அவரது உடல்நிலை தொடர்பில் பதற்றத்தில் உறைந்துள்ளது பிரிட்டன். (ம)



## 50 நாடுகளுக்கு 400 கோடி முகக்கவசங்கள் ஏற்றுமதி

### தரமற்றவை எனவும் பரவலாக குற்றச்சாட்டு

பீஜிங், ஏப். 7

கொரோனா வைரஸால் உலகமே திண்டாடிவரும் நிலையில் 50 நாடுகளுக்கு 400 கோடி முகக் கவசங்களை ஏற்றுமதி செய்துள்ளோம் என்று தெரிவித்தது சீனா.

இது தொடர்பில் சீன அரசு தெரிவித்ததாவது:

கொரோனாவுக்கு எதிராக சீனாவும் உலக நாடுகளுடன் இணைந்து போரிட்டு வருகின்றது. நாம் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட போதிலும் கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தை உலக நாடுகளுடன் சேர்ந்து முழு வீச்சுடன் மேற்கொண்டு வருகின்றோம். கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து இது வரையான காலப்பகுதிக்குள் 50க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சுமார் 400 கோடி சுவாசக் கருவிகளை ஏற்றுமதி செய்துள்ளோம் என்று தெரிவித்தது.

சீன அரசின் கருத்து இவ்வாறாக உள்ள அதேநேரம், சீனாவின் மருத்துவத் தயாரிப்புக்கள் தரமற்றவை என்ற குற்றச்சாட்டை உலக நாடுகள் பரவலாக முன்வைத்துள்ளன. சீனாவின் முகக்கவசங்கள் தரமற்றவை என்று தெரிவித்து 6 லட்சம் முகக்கவசங்களை நெதர்லாந்து சீனாவுக்கே திருப்பி அனுப்பியது. ஆயிரக் கணக்கான சோதனை கருவிகளை ஸ்பெய்ன் நிராகரித்தது. (ம)

## கொரோனாவின் பிடியில் இருந்து மெல்ல விடுபடுகின்றது இத்தாலி

உரோம், ஏப். 7

கொரோனா வைரஸின் கோரப் பிடியில் இருந்து, இத்தாலி மெல்ல மெல்ல விடுபட ஆரம்பித்துள்ளது.

கொரோனாவால் அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடுகளின் பட்டியலில் இத்தாலிதான் முதலிடத்தில் உள்ளது. அங்கு சுமார் 16ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த நில தினங்களாக இத்தாலியில் ஒவ்வொரு நாளும் தலா ஆயிரம் பேர் என்ற அடிப்படையில் உயிரிழப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருந்தன. ஆனால் கடந்த இரண்டு, மூன்று தினங்களாக உயிரிழப்பு எண்ணிக்கை பாதியாகக் குறைவடைந்துள்ளது. இது இத்தாலிக்கு புது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.



இதுகுறித்து இத்தாலியின் தேசிய சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் சில்வியோ புராசாபேரோ நிருபர்களிடம் தெரிவித்ததாவது: 'இத்தாலியில் கடந்த சில நாட்களாக உயிரிழப்புகள் வீதம் குறைந்து வருவது கொரோனா வைரஸின் தாக்கத்தை குறிக்கும் வளைவு கோடு சாயத்தொடங்குவதைக் குறிக்கிறது. தொடர்ந்து இதுபோல் இறப்புகள் வரும் நாட்களில் குறைந்து வந்தால், ஊரடங்கை தளர்த்தும் அடுத்தகட்ட நடவடிக்கையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குவோம்' என்றார். (ம)

# கொழும்பில் சிக்கிய வெளியூர்வாசிகளை சொந்த இடங்களுக்கு அனுப்பத் திட்டம்

## ஜனாதிபதி செயலணி ஆராய்கிறது

**கொழும்பு, ஏப். 7**

**கொழும்பில் சிக்கியுள்ள வெளிமாவட்டக்காரர் பஸ், ரயில் மூலமாக இந்தவாரம் அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். அவர்கள் முதற்கட்ட மருத்துவ பரிசோனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அனுப்பப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.**

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற 'கொரோனா' நிலைமை தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

"சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுபவர்களை அந்தந்த மாவட்ட, பிரதேச பொதுச் சுகாதார அதிகாரிகள், பொறுப்பேற்று, அவரவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்படுவார்கள். அவரவர்களுடைய வீடுகளில் தனிமை நிலையில் வைக்க முடியாவிட்டால், ஒவ்வொரு மாவட்டங்களிலும், கொழும்பில் இருந்து வருகின்றவர்களுக்காக கொரோனாத் தனிமை நிலையங்கள் அமைத்து தங்க வைக்கப்படவேண்டும். மருத்துவ அனுமதியின் பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்" என்று கூட்டத்தில் மனோகணேசன் ஆலோசனை தெரிவித்தார். வெளிமாவட்ட மக்கள் கொழும்பிலிருந்து வெளியேறுவது கொழும்பில் சமூக இடைவெளியை ஏற்படுத்த உதவும். இது கொழும்பில் நிரந்தரமாக வசிக்கும் மக்களுக்கு நன்மை தரும் என்றும் மனோ தெரிவித்தார்.

"குறித்த நபர்களை அனுப்பி வைக்கும் நடைமுறை இவ்வாறம் ஆரம்பமாகும். இதுபற்றி இன்று(நேற்று) நடக்கும் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் தெரிவிக்கிறேன்"என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உறுதியளித்தார். (த)

# வெளியூர் சென்றால் தனிமைப்படுத்தல்!

## மட்டக்களப்பில் இப்படி தீர்மானம்

மட்டக்களப்பு, ஏப்.7

மீன்களை விற்பனை செய்வதற்கு வெளிமாட்டங்களுக்குச் செல்வதானால், அவர்கள் மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி பெற்றுச் சென்றாலும், மீண்டும் மாவட்டத்துக்கு திரும்பியவுடன் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும் என்று மட்டக்களப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன் வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"வெளி மாவட்டத்துக்கு மீன் கொண்டு செல்லும் நபர்கள் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் அனுமதிபெறப்பட்டு பின்னர் திரும்பும் பட்சத்தில் 14 நாள்கள் சுய தனிமைப் படுத்தல் இருக்க வேண்டும். அத்தோடு வேறு மாவட்டத்தினர் யாரையும் வாகனத்தில் ஏற்றி வரக் கூடாது. வெளி மாவட்டங்களில் இருந்து மீன் கொள்வனவுக்கு வரும் வாகனங்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது டன், கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பிரதேசத்தைக் காப்பாற்றும் நோக்கில் மீனவர்களின் ஒத்துழைப்புடன் ஆழ்கடலுக்குச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு சிறு படகுகள் மூலம் கொண்டு வரப்படும் மீன்கள் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் மாத்திரம் விற்பனை செய்ய வேண்டும்" என்ற தீர்மானங்கள் கலந்துரையாடலில் எடுக்கப்பட்டன. (ட-150)

# இலங்கை வங்கியின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.7

நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இலங்கை வங்கி தனது நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளது.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளதால் மக்கள் தமது வங்கித்தேவையை மேற்கொள்ள முடியாமலும் ,நீண்ட வரிசையில் காத்தும் நிற்கின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் இன்று செவ்வாய்க்கிழமை நடமாடும் சேவையை நடத்தவுள்ளது.

காலை 8.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்திலும், முற்பகல்9.30மணிக்கு கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் வளாகத்திலும், முற்பகல் 10.30 மணிக்கு மோகனதாஸ் வாசிகசாலையிலும், முற்பகல் 11 மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திலும்,பிற்பகல் 2 மணிக்கு மந்துவில் மேற்கிலும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. (ஐ)

# கொடுப்பனவு வீடுகளுக்கு

பளைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியோர், மாற்றுத் திறனாளிகள் என்போருக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் சமூர்த்திப் பயனாளிகளுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் உரியவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலரின் ஏற்பாட்டில் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களும், சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் இந்தக் கொடுப்பனவை வழங்கி வருகின்றனர். (க-9)

# பாதுகாப்பு உபகரணங்கள் தேவையானளவு வழங்கவும்

## சிவமோகன் கோரிக்கை

வவுனியா, ஏப்.7

சுகாதார ஊழியர்கள் அனைவருக்கும் சுய பாதுகாப்பு உபகரணங்கள் தேவையானளவு வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மருத்துவர் சி.சிவமோகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவும் நிலையில் மருத்துவமனைகளில் சுய பாதுகாப்பு அங்கிகள் மற்றும் முகக் கவசங்கள் போன்றனவற்றுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே சகல மருத்துவமனைகளிலும் சுகாதார ஊழியர்களைப் பாதுகாக்கக் கூடிய அளவு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் அரசு பொறுப்புடன் செயற்படவேண்டும் என்று அவர் மேலும் தெரித்துள்ளார். (த)

# ஆதி சிவனில் மகா யாகம்

உலகை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியிருக்கும் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மக்கள் விடுபடவேண்டும் என்று வவுனியாவில் மகா யாகம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உலகையே பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியிருக்கும் கொரோனா வைரஸ் நோய் இலங்கையிலும் பலரைத் தாக்கியுள்ளது. இறப்புச் சம்பவங்களும் பதிவாகிக் கொண்டுள்ளன. இந்த நிலையில் வவுனியா, தோணிக்கல் திருவருள்மிகு விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாதர் திருக்கோவி லில் (ஆதிசிவன் ஆலயம்) 10 நாள் அலங்கார உற்சவம் நடைபெற்று, பூர்த்திநாளன்று உலக மக்களைத் தாக்கிக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) இலிருந்து மக்களை விடுவிப்பதற்காக வேண்டி 'மகா யாகம்' ஒன்றும் நடைபெற்றது. இந்த நிகழ்வு சிவஸ்ரீ. நா.பிரபாகரக் குருக்கள் தலைமையில் இடம் பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ட-222)

# அன்பின் கரத்தால் உலருணவு உதவி

முல்லைத்தீவு, ஏப்.7

ஜீவஊற்று அன்பின் கரம் எனும் அமைப்பினரால் முல்லைத்தீவு மாட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுப்பொருள்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் அன்றாடம் கூலி வேலை செய்து தங்களுடைய வாழ்வைக் கொண்டு நடத்தும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, வெள்ளப்பள்ளம் மற்றும் கேப்பாப்பிலவு பகுதியில் உதவி தேவையானவர்களை அடையாளம் கண்டு இந்த உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியை அன்பின் கரம் நிறுவன சுவிட்சர்லாந்து கிளை மக்கள் மற்றும் நோர்வே ஜெயசோதி, தீபன் குடும்பத்தினர் வழங்கியிருந்தனர் என்று அந்த அமைப்பினர் தெரிவித்தனர். (ட-222)





# அடியார்கள் இல்லாமலேயே புளியம்பொக்கணைப் பொங்கல்

**கிளிநொச்சி,ஏப்.7**

**வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம் பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் அடியார்கள் எவரும் அற்ற நிலையில் அனுமதிக்கப் பட்ட 10 பேருடன் நேற்று நடைபெற்றது.**



கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பொது மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் வகையில், ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவம், பொது மக்கள் எவரும் இல்லாது அனுமதி வழங்கப்பட்ட ஆலய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பூசகர்கள் உள்ளிட்ட 10 பேருடன் நடைபெற்றது.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கலின் போது, நாட்டின் பல பாகங்களிலிருந்து இலட்சக்கணக்கான பொது மக்கள் கலந்துகொள்ள, பறவைக் காவடிகள், காவடிகள், பாற்செம்பு, தீச் சட்டி என அடியவர்களின நேர்த்திக் கடன்கள் இடம்பெறுவது வழக்கமாகும்.

ஆனால்தற்போதுஏற்பட்ட கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ,ஆலயத்தை சுற்றியும், ஆலயத்துக்குச் செல்லும் வீதியெங்கும் இராணுவம், விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் அதிகளவில் பாதுகாப்புப் பணியில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர். ஆலயத்துக்கு வருகை தந்த பொது மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-214)



# யாழ்.போதானவுக்கு ஒரு தொகுதி மாஸ்க்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கென ஒரு தொகுதி முகவுறைகள் ('மாஸ்க்' )கையளிக்கப்பட்டுள்ளன. கொரோனாத்தாக்கத்தின் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும், மருத்துவமனை ஊழியர்கள் தங்களுடைய கடமைகளை துணிச்சலுடன் ஆற்றி வருவதைக் கருத்திற் கொண்டு அவர்களின் பாதுகாப்புக்கென இந்த முகவுறைகள் கையளிக்கப்பட்டுள்ளன. லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயம், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் என்பவற்றின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்து குருமார் ஒன்றியத்தின் ஊடாக இந்த முகவுறைகள் , மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியிடம் நேற்று கையளிக்கப்பட்டன. (ஐ-7)

### மருத்துவமனை செல்ல

# பிரதேச செயலகத்தின் "பாஸ்" தேவையில்லை

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளபோது மருத்துவமனை மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்குச் செல்வோர் பிரதேச செயலகத்தில் "பாஸ்" பெற வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தாக்கம் காரணமாக நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளபோது, மருத்துவமனையில் சிகிச்சை பெறச் செல்வோரும் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் செல்பவர்களும் பிரதேச செயலகத்தில் 'பாஸ்' பெறுவதற்கு வருகை தருகின்றனர். இவ்வாறு அதிகமானவர்கள் பிரதேச செயலகத்துக்கு வருவதாலேயே, அவர்களுக்கு பாஸ் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# தனிமைப்படுத்தலுக்காக 50 பேர் தியத்தலாவைக்கு

கொழும்பு, ஏப். 7

தனிமைப்படுத்தலுக்காக தியத்தலாவை மையத்துக்கு 50 பேர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரோனாத் தொற்றாளியுடன் தொடர்பில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்ட கராப்பிட்டி, அக்குரஸ்ஸ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தியத்தலாவை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று படையினர் தெரிவித்தனர்.

இதில் 17 ஆண்களும் 17 பெண்களும் 9 பெண்பிள்ளைகளும் 7 ஆண்பிள்ளைகளும் அடங்குகின்றனர்.

இதுவரை தியத்தலாவை முகாமில் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தவர்களே தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-114)

# இ.போ.ச பஸ்களில் மாயமானது டீசல்!

### கோண்டாவில் டிப்போவில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

கோண்டாவில் டிப்போவில் தரித்து விடப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 6 பஸ்களில் நிரப்பப்பட்டிருந்த டீசல் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அனைத்தும் கோண்டாவில் பஸ் நிலையத்தில் தரித்து விடப்பட்டுள்ளன.

இவ்வாறு தரித்து விடப்பட்ட 6 பஸ்களில் இருந்தே டீசல் திருடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோண்டாவில் சாலையின் உயர் அதிகாரிகள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

அதேவேளை பஸ் ஒன்றில் இருந்து ஒரு தொலைக்காட்சியும் திருடப்பட்டுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-20)

# மரக்கறி விதைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கான 5 வகையான மரக்கறி விதைகள் விநியோகம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக ஒருவருக்கு ஒரு பைக்கற் வீதம் 20 ரூபாவுக்கு விநியோகிக்கப்படுகிறது.

முழுப்பெயர்,தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் கிராம அலுவலர் பிரிவு போன்ற விவரங்கள் பதியப்பட்டு இந்த விதைப் பைக்கற் விநியோகிக்கப்படுகிறது.

கத்தரி, வெண்டி, பயிற்றங்காய், கறிமிளகாய், மிளகாய் ஆகிய 5 வகையான மரக்கறிகளின் விதைகள் இதில் உள்ளன. (ஐ-7)

# திருடனால் பொலிஸாருக்கும் கொரோனாத் தொற்று அபாயம்

பொலிஸாரால் கைதுசெய்யபட்ட இளைஞரொருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 10 பொலிஸார் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி இரவு வத்தளைப் பிரதேச பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்து திருடினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

28 வயதுடைய அந்த நபர் பிரதேசவாசிகளால் நையப்புடைக்கப்பட்டபின்னர் போபிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, தாக்குதல்களால் காயமடைந்தி
ருந்த சந்தேகநபர் ராகம
மருத்துவமனையில் சிகிச்
சைக்காகச் சேர்க்கப்பட்டி
ருந்தபோதே, அவருக்கு
கொரோனா தொற்று ஏற்
பட்டுள்ளமை கண்டறியப்
பட்டுள்ளது. ஆகவே
குறித்த பொலிஸ் நிலை
யத்தில் கடமையாற்றும் 10
பொலிஸார் தனிமைப்ப
டுத்தப்பட்டுள்ளனர் என்று
தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் இடம்பெற்ற
மற்றொரு சம்பவத்தில்
போதைப் பொருள் கடத்தி
னார் என்ற குற்றச்சாட்டில்
சந்தேகநபர் ஒருவரைப்
பொலிஸார் கைது செய்தி
ருந்தனர். அந்த நபருக்
கும் கொரோனா இருப்பது
உறுதியானதால், அந்தச்
சந்தேகநபரைக் கைது
செய்த பொலிஸ் குழுவும்
தனிமைப்படுத்தலில் உள்
ளது என்பது குறிப்பிடத்தக்
கது. (த-114)

# விவசாய ஓய்வூதியம் வழங்கல்

தென்மராட்சிப் பிரதேச விவசா
யிகளுக்கான ஏப்ரல் மாதத்
துக்கான விவசாய ஓய்வூதியக்
கொடுப்பனவு நேற்றுத் தொடக்
கம் அஞ்சல் மற்றும் உப அஞ்
சல் அலுவலகங்கள் ஊடாக விநி
யோகிக்கப்பட்டு வருகின்றன.
விவசாய ஓய்வூதியர்கள் தமது
விவசாய அடையாள அட்டை
யுடன் அந்தந்த அஞ்சல் மற்
றும் உப அஞ்சல் அலுவலகங்
களில் எதிர்வரும் 10ஆம் திகதி
வரை காலை 8.30 மணி
தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை
பெற்றுக் கொள்ளலாம் என்று
அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2020இல் வெளியிடப்பெற்றது.